தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 19/பேரூ/2021

நாள் 22.11.2021

திருமதி. E. சாந்தி,
மகாதானபுரம், கன்னியாகுமரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கொட்டாரம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், மகாதானபுரம் அஞ்சல், 4/52 பஞ்சலிங்கபுரத்தைச் சேர்ந்த திருமதி. இ. சாந்தி என்பவரின் 24.01.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.1.2020ல் பெறப்பட்டு 19/2020என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மகாதானபுரம் அஞ்சல், 4/52 பஞ்சலிங்கபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. E. சாந்தி, தமது புகார் மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சியில் 2018–2019ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கொட்டாரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய நியாயவிலை கடை கட்டுதல் வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி கொடுத்து, ஒப்பந்தம் தனக்கு கிடைத்தது என்றும் இதற்கான வேலை உத்தரவு (work order) 28.6.2019 அன்று வழங்கப்பட்டது என்றும், பணியை முடிப்பதற்கு ஆறு மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது என்றும் அதன் அடிப்படையில் வேலை நன்கு தரமாக ஆறு மாதத்திற்குள் முடிக்கப்பட்டு நியாயவிலை கடை திறப்பு விழாவும் நடைபெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். வேலையின் மொத்த மதிப்பீடு ரூ.9,80,000/– முதல் தவணையாக ரூ.7,60,000/–ஐ தான் வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வேலை முடிவு பெற்று பணி

நிறைவு அறிக்கை (work completion report) 20.12.2019 அன்று வழங்கப்பட்டது. இதனுடைய அனைத்து ஆவணங்களும், புகைப்படம் உள்பட பேரூராட்சி அலுவலகத்தில் முறைப்படி கொடுத்துவிட்டு பாக்கித் தொகையான ரூ.2,20,000/–ஐ கேட்டபோது செயல் அலுவலர் பா. சுந்தரேசன் தனக்கு கையூட்டாக ரூ.40,000/–ஐ தருமாறு கேட்டார். அதற்கு தான் பணம் தரமாட்டேன் என்றும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு தெரியப்படுத்துவேன் என்று கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனை மனதில் வைத்துக்கொண்டு செயல் அலுவலர் அவர்கள் பணி முடிவுபெற்று 35 நாட்கள் ஆகியும் பணம் தராமல், பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் பணம் இல்லையென்றும், இன்று நாளை என்று நாட்களை கடத்தி இழுத்தடித்து வருகிறார். இதனால் தான் கட்டுமானப் பொருட்கள் வாங்கியதற்கு பணம் கொடுக்க முடியாமலும், வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமலும் மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும், எனவே மேற்படி செயல் அலுவலர் பா. சுந்தரரேசன் அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுத்து தனக்குக் தரவேண்டிய மீதிப்பணம் ரூ.2,20,000/–ஐ உடனே வழங்கிட, உரிய விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான விளக்க அறிக்கையினை அனுப்பிடக்கோரி கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டார். கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பியுள்ள 19.8.2021 நாளிட்ட அறிக்கையில் ஒப்பந்ததாரர் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்ததன் அடிப்படையில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் செயல்முறை ஆணை எண்.ஆ2/4506/2017 நாள் 16.7.2019–ன்படி மொத்த மதிப்பீட்டில் 75% தொகையான ரூ.7.35 லட்சம் விடுவிக்கப்பட்டு பேரூராட்சி பாாாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வங்கிக் கணக்கில் வரவாக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் திருமதி. E. சாந்திக்கு முதல் தவணைத் தொகை ரூ.7.60 லட்சம் (கூடுதலாக ரூ.25,000/–) 10.10.2019ல் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒப்பந்ததாரரால் 20.12.2019ல் பணி முடித்து பணி முடிவறிக்கை மற்றும் பட்டியல் பேரூராட்சியில் கிடைக்கப்பெற்று, கொட்டாரம் பேரூராட்சி செயல் அலுவலர் கடித எண்.46/2019/அ1 நாள் 13.1.2020–ன்படி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு மீதித் தொகையினை விடுவிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து இறுதித் தவணைத் தொகை ரூ.2.45 இலட்சம் விடுவிக்கப்படவில்லை என்றும், ஆனால் ஒப்பந்ததாரர் மீதித்தொகையை விடுவிக்கவேண்டி அழுத்தம் கொடுத்துவந்ததன் அடிப்படையில், பேரூராட்சி பொது நிதி கணக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட கணக்கிற்கு தொகை மாற்றம் செய்யப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவேண்டிய மீதித்தொகை ரூ.2.20 இலட்சத்தில் பிடித்தம் போக ரூ.2,02,100/– (ரூபாய் இரண்டு லட்சத்து இரண்டாயிரத்து நூறு மட்டும்) காசோலை எண்.328266 நாள் 4.5.2020–ன்படி வழங்கப்பட்டு, அதற்கான ஒப்புதலையும் திருமதி. E. சாந்தி தமது 4.5.2020 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரரது புகார் மனு மற்றும் கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரது 19.8.2021 நாளிட்ட விரிவான விளக்க அறிக்கை ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவம் கவனமுடன் ஆய்வு செய்தது. மனுதாரரது புகார் மனுவில் இடம்பெற்றுள்ள கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அவர் கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் பேரூராட்சியில் 2018–2019ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கொட்டாரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய நியாகவிலைக் கடை கட்டும் பணி மேற்கொண்டதற்கு முழு தொகையும் மனுதாரருக்கு கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 4.5.2020–ல் வழங்கப்பட்டு அத்தொகையினை மனுதாரரும் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகையும் அளித்துள்ளபடியால், கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ளலாம் என முடிவுசெய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இதுபோன்ற காலதாமதம் மற்றும் புகார்களைத் தவிர்த்து அவ்வப்போது விதிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்ததாரர்களுக்கு பணித் தொகைகளை வழங்குவதை உறுதிசெய்ய பேரூராட்சிகளின் ஆணையாளர் ஒரு சுற்றறிக்கை அனுப்பவும் அதைமீறி செயல்படும் செயல் அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திருமதி. E. சாந்தி,
4/52, பஞ்சலிங்கபுரம், மகாதானபுரம், கன்னியாகுமரி மாவட்டம்

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028

செயல் அலுவலர்,
கொட்டாரம் முதல்நிலை பேரூராட்சி,
கொட்டாரம் மற்றும் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்–629 703
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்